

# கனடாவில் விரைவான தொடக்கத்தைப் பெறுங்கள்.



Scotiabank®

# உள்ளடக்கம்


| தலைப்புப் | பக்கம் |
|---|---|
| வரவேற்பு | 1 |
| புதுவாழ்வு தொடக்கம் | 2-5 |
| உலகளாவிய பலம், சமூகத் தொடர்பு | 7 |
| புதுவாழ்வில் நிலைப்படுதல் | 8-10 |
| துறைச்சொற்கள் பட்டியல் | 11-12 |


Scotiabank *StartRight* திட்டத்தைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள, www.startright.scotiabank.com, இணையதளத்திற்குச் செல்லவும், ஆங்கிலம், பிரெஞ்சு மற்றும் காண்டனீஸ் மொழிகளில் உதவிக்கு 1-866-800-5159 (வட அமெரிக்காவில் மட்டும்) தொடர்பு கொள்ளவும் அல்லது உங்களுக்கு அருகில் உள்ள ஸ்கோஷியா வங்கிக் கிளைக்குச் செல்லவும்.

# கனடாவிற்கு உங்களை வரவேற்கிறோம், Scotiabank வங்கிக்கு உங்களை வரவேற்கிறோம்.

வாழ்த்துக்கள். நீங்கள் புதிய நாட்டிற்குக் குடியேறும் மிகப்பெரிய முடிவை எடுத்திருக்கிறீர்கள் அல்லது ஏற்கனவே இங்குக் குடியேறிப் புதுவாழ்வைத் தொடங்கும் நிலையில் இருக்கிறீர்கள். கனடாவில் உங்கள் புதுவாழ்வைத் தொடங்கும் போது உடனடியாகக் கருத்தில் கொள்ள வேண்டிய பல காரியங்கள் உள்ளதை நீங்கள் அறிவீர்கள். உங்கள் பணத்தை எவ்வாறு கையாள்வதென்பது உங்கள் பட்டியலில் முதன்மையானதாக இருக்கலாம்.

Scotiabank *StartRight*™ "திட்டம் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் உங்களுக்குத் தேவையான சரியான அறிவுரை மற்றும் பொருளாதாரத் தீர்வுகளை அளிக்கிறது. இந்தத் திட்டம் தங்களின் தனிப்பட்ட வங்கிச் செயல்பாட்டில் போதுமான சேமிப்புகள் மற்றும் பல சிறப்புச் சலுகைகள் அளிப்பது உட்பட எளிதான மற்றும் முழுமையான பொருளாதாரத் தீர்வுகளை உங்கள் வசதிக்கேற்ப ஒரே திட்டத்தின் கீழ் அளிக்கிறது.

ஒரு புதிய நாட்டில் குடியேறி வாழ்வை அமைத்துக் கொள்வதிலுள்ள சிக்கல்களை நாங்கள் அறிவோம். அதற்கான பாதையின் ஒவ்வொரு படியிலும் உங்களுக்கு உதவ நாங்கள் இருக்கிறோம்.

உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் ஒரு செழிப்பான வாழ்வை உருவாக்குவதற்குத் தேவையான சரியான பொருளாதார வழிமுறைகளைத் தங்களுக்கு அளிப்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். Scotiabank *StartRight* திட்டத்தைப் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு, எங்கள் இணையதளத்திற்குச் செல்லுங்கள் அல்லது இன்றே எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.



# புதுவாழ்வு தொடக்கம்




கனடாவில் தொடக்கக் காலத்தில் நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் புதிய வாழ்வுக்கேற்ப உங்களை மாற்றியமைத்துக் கொள்வதில் ஈடுபட்டுக் கொண்டிருப்பீர்கள். நீங்கள் வேலை தேடிக்கொண்டோ, சொந்தத் தொழில் தொடங்கிக்கொண்டோ, வீடு தேடிக்கொண்டோ அல்லது சமூகக் காப்புறுதி எண்(SIN) மற்றும் உடல்நல அட்டை போன்ற அரசு ஆவணங்களுக்காக விண்ணப்பித்துக் கொண்டோ இருக்கலாம்.

புதிதாக வந்தவராதலால், உங்களுக்குத் தொடக்க காலத்தில் சரியான அறிவுரை தேவைப்படும். உங்களது பொருளாதார இலக்குகளை அடைவதற்கு உதவியாக Scotiabank *StartRight* திட்டத்தின் மூலம் பல்வேறு கலாச்சாரங்களிலிருந்து வரும் எமது அலுவலர்களிடமிருந்து நீங்கள் சரியான அறிவுரையும் தீர்வுகளும் பெறுவீர்கள்.



## கனடாவில் புதிதாக வந்தவர்களுக்கான உதவிக் குறிப்புகள்

1. சொந்தப் பொருட்கள் - குடியேற வந்தவராக கனடாவிற்கு வருவதற்கு முன் உங்களிடமிருந்த தனிப்பட்ட மற்றும் வீட்டு வசதிப் பொருட்களை சுங்க மற்றும் கலால் வரியின்றி உங்களுடன் கொண்டு வரும் உரிமை உங்களுக்கு உண்டு. முடிந்தால் இந்தப் பொருட்கள் உங்களுடையதுதான் என்பதற்கும் உங்கள் தனிப்பட்ட பயன்பாட்டிற்குத்தான் என்பதற்கும் ஆதாரமாக இரசீதுகள் ஏதும் இருந்தால் அவற்றைத் தயாராக வைத்துக் கொள்ளவும்.

2. சமூகக் காப்புறுதி எண் - சமூகக் காப்புறுதி எண்ணுக்காக (SIN) விண்ணப்பிப்பது வந்தவுடன் செய்ய வேண்டிய முதன்மையான காரியங்களில் ஒன்றாக இருக்க வேண்டும். இந்த எண் இல்லாமல் நீங்கள் எந்தவொரு வேலைக்கோ, அரசு உதவிக்கோ, கடனுக்கோ விண்ணப்பிக்க முடியாது. மேலதிக விவரங்களுக்கு, சர்வீஸ் கனடாவின் www.servicecanada.gc.ca இணையதளத்திற்குச் செல்லவும்.

3. உடல்நல அட்டை - அரசு உடல்நல அட்டைக்கு உங்களால் முடிந்த அளவு உடனடியாக விண்ணப்பிக்கவும், ஏனென்றால் அரசு உதவிக்கு நீங்கள் தகுதியடைவதற்குக் காத்திருக்கும் காலம் இருக்கலாம். கூடுதல் விவரங்களுக்கு, உங்கள் மாகாண உடல்நல அமைச்சகத்தின் இணையதளத்திற்குச் செல்லவும்.

4. பள்ளிச் சேர்ப்பு - நீங்கள் கனடாவிற்கு வந்தவுடன் முடிந்தவரை உடனடியாக உங்கள் குழந்தைகளைப் பள்ளியில் கண்டிப்பாகச் சேர்க்க வேண்டும். பள்ளிகள் பொதுவாக செப்டம்பர் முதல் ஜுன் வரையில் வார நாட்களில் இயங்கும்.

5. குழந்தை வரி நலன் - உங்களுக்குக் குழந்தைகள் இருந்தால் கனடா அரசின் பொருளாதார உதவிக்கு நீங்கள் தகுதியானவராக இருக்கலாம். கனடா குழந்தை வரி நலன் (CCTB) வரியற்றது மற்றும் ஒவ்வொரு மாதமும் 18 வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகளின் பொறுப்பேற்றுள்ள பெற்றோருக்கு அளிக்கப்படும். கூடுதல் விவரங்களுக்கு, கனடா வருமான நிறுவனத்தின் www. cra-arc.gc.ca இணையதளத்திற்குச் செல்லவும்.

6. வெளிநாட்டு சான்றுகள் - வெளிநாட்டு சான்றுகள் பற்றி குறிப்பிடும் அலுவலகத்தின் அலுவலக இணையதளம் ww w credentials.gc.ca ca "கனடாவில் வேலை செய்தல்" என்ற தேடுதல் இயந்திரத்தைக் கொண்டுள்ளது. உங்கள் தொழிலை டைப் செய்தால் தேடுதல் இயந்திரம் கனடாவில் அந்தத் தொழில் ஒழுங்குபடுத்தப்பட்டதா மற்றும் அதைச் செய்ய நீங்கள் ஏதேனும் ஒழுங்குமுறை அமைப்பிடமிருந்து உரிமம் பெறவேண்டுமா போன்ற விரிவான விவரங்களைக் காட்டும்.

7. வேலை தேடுதல் - பெரும்பாலும் வேலை தேடுபவர்களுக்கு, தேட ஆரம்பிக்க சிறந்த இடம் அருகிலுள்ள வேலை வாய்ப்பு மையம். கூடுதல் விவரங்களுக்கு, www.servicecanada.gc.ca இணையதளத்திற்குச் செல்லவும்.

8. தொலைபேசி அட்டைகள் - முன்பணம் செலுத்தப்பட்ட தொலைபேசி அட்டைகள் அதிக செலவில்லாத பன்னாட்டு அழைப்புக் கட்டணங்களை வழங்குகின்றன,ஆனால் இணைப்புக் கட்டணம் மிக அதிகமாக இருக்கலாம், "அது உங்கள் பேசும் நேரத்தைக் குறைத்திடலாம்" எச்சரிக்கையாயிருங்கள்.

அரைவல் சர்வைவல் கனடா எ: *ஹேண்ட்புக் பார் நியூ இம்மிக்ரன்ட்ஸ்* என்ற புத்தகத்திலிருந்து ஆசிரியர்கள் நயீம் "நிக்" நூரானி மற்றும் சப்ரினா நூரானி மற்றும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக , கனடா அச்சகம் ஆகியவர்களின் அனுமதி பெற்று எடுக்கப்பட்டு பதிப்பிக்கப்பட்டது ( பதிப்புரி மை© ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகம் கனடா 2008).

## முதல் வங்கிக் கணக்கு தொடங்குதல்

கனடா வங்கி ஒன்றில் கணக்குத் தொடங்குவது உங்களது முதலாவது பணிகளில் ஒன்றாக இருக்கும். நீங்கள் உங்கள் அன்றாட வங்கி வரவு செலவுகளை கனடிய மற்றும் அமெரிக்க டாலர்கள் அல்லது யூரோவில் வைத்துக் கொள்ளலாம். இந்தக் கணக்கு உங்கள் பணத்தைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும், கட்டணங்களைச் செலுத்தவும், பண இடமாற்றம் செய்யவும் மற்றும் காசோலையை டெபாசிட் செய்யவும் உதவியாக இருக்கும்.

உங்கள் Scotiabank வங்கிக் கணக்கு மூலம் உங்களுக்கு *ScotiaCard*™ வங்கி அட்டையும் தனிநபர் அடையாள எண்ணும் (PIN) 7 தரப்படும். இந்த 24 அட்டையை அனைத்து ஸ்கோஷியா வங்கிக் கிளைகள், ஆன்லைன் மற்றும் தொலைபேசி பேங்கிங், தானியங்கு வங்கி மெஷின்களில் (ABM) வாரத்தில் நாட்கள் மணி நேர சேவைகள் மற்றும் நேரடி பணம் செலுத்தும் சேவைகள் (விற்கும் இடம்) ஆகியவற்றில் பயன்படுத்தலாம். உங்கள் வங்கி அட்டையை உலகெங்கிலுமுள்ள ஒரு *ScotiaCard* மேலான VISA அல்லது PLUS அடையாளங்கள் 1 உள்ள ABM-களில் பயன்படுத்தலாம்.

### ஸ்கோஷியா வங்கி Scotiabank *StartRight* "தேவையான இரண்டுஆவணங்கள்

- குடியேற வந்தவர் என்பதற்கான சான்று - இம்மிக்ரேஷன் லேண்டிங் டாகுமென்ட் (IMM5292)
- செல்லத்தக்க புகைப்பட அடையாளம் வெளிநாட்டு பாஸ்போர்ட், கனடாவில் வழங்கப்பட்ட ஓட்டுநர் உரிமம், அல்லது நிரந்தர குடியிருப்பு அட்டை

Scotiabank வங்கியில் கணக்குத் தொடங்க ஏற்கனவே பணவரவு வைத்த வரலாறோ, டெபாசிட்டோ, வேலையோ தேவையில்லை. Scotiabank வங்கியில் கணக்குத் தொடங்குவது உங்கள் பணிகளிலேயே எளிதானதாக இருக்குமென்று உறுதி செய்கிறோம்.



## கனடாவில் உங்களது கடன் வரலாறை ஏற்படுத்துதல்



சிறிய காரியங்களைச் சரியான முறையில் செய்வது தான் சிறப்பான முறையில் தொடங்க வழிவகுக்கும், அதுபோலவே வைப்பு-எடுப்புக் கணக்குகளை ஏற்படுத்துத ல் உங்களது பொருளாதார அடிப்படையைக் கட்டமைக்கும். கனடாவில் உங்கள் வைப்பு-எடுப்பு வரலாறு உங்களது கடன் தகுதியின் அளவீடு ஆகும்;பணத்தைத் திருப்பிச் செலுத்துவதில் உங்களது தகுதி.

### எவ்வாறு நல்ல கடன் மதிப்பீட்டைப் பெறுவது?

- உங்கள் கட்டணங்களை, குறிப்பாகக் கடன் அட்டை தொகைகளை நேரத்தில் செலுத்துங்கள்
- உங்களுக்குத் தேவையான மற்றும் உங்களால் முடிந்த தொகைகளை மட்டும் கடன் பெறுங்கள்
- எப்போதும் உங்கள் கடன் தவணைகளை நேரத்தில் செலுத்துங்கள்




Scotiabank *StartRight* திட்டம் உங்கள்து பொருளாதார நிலைமைக்கு நல்ல தொடக்கம் தரும் பொருட்டு ஒரு கடன் அட்டையும் [2] தருகிறது.

கடன் அட்டை, எரிவாயு அட்டை அல்லது சில்லறை விற்பனையாளர்கள் ஆகியோரிடம் உங்களது சிறந்த கடன் வரலாறானது உங்களுக்கு கனடாவில் தொலைபேசி இணைப்புப் பெறுதல், வீடு வாங்குவதற்கோ தொழில் தொடங்குவதற்கோ கடன் வாங்குதல் ஆகியவற்றிற்குப் பயன்படும். எவ்வாறு உங்களது முதல் கடன் அட்டையைப் பெறலாம் என்பது பற்றி அறிய ஒரு Scotiabank வங்கிப் பிரதிநிதியைத் தொடர்பு கொள்ளவும்.



## பணம் அனுப்புதல் மற்றும் பெறுதல்

நீங்கள் கனடாவிற்கு குடிபெயர்ந்திருப்பது உங்களுக்கும் உங்கள் உறவினர்கள், நண்பர்கள், தொழில் நண்பர்கள் ஆகியோருக்குமிடையே பலத்த இடைவெளியை ஏற்படுத்தியிருக்கலாம். அதனால்தான் பாதுகாப்பான முறையில் பணம் செலுத்துவது மற்றும் பெற்றுக் கொள்வது முக்கியமானதாகிறது.

Scotiabank வங்கியில் கணக்கு வைத்திருந்தால் கனடாவிற்குள் அல்லது பன்னாட்டளவில் பணம் அனுப்புவதும் பெறுவதும் எளிதானதாகவும், செலவு குறைவானதாகவும் இருக்கும். Scotiabank வங்கிப் பிரதிநிதி ஒருவர் பாதுகாப்பான வழிகளில் உங்களுக்கு பணம் அனுப்புவதற்கோ பெறுவதற்கோ உதவக்கூடும்.

### வயர் ட்ரான்ஸ்கூபெர்ஸ்:

பன்னாட்டளாவில் பணம் அனுப்புவதற்கும் பெறுவதற்கும் ஒரு சிறந்த வழி Scotiabank வங்கி வழங்கும் வயர் ட்ரான்ஸ்பெர்ஸ் சேவைகள். உங்களது Scotiabank வங்கிக் கிளையால் கனடாவிற்குள்ளோ அல்லது உலகின் வேறு எந்தப் பாகத்திற்கோ எந்தக் கரன்சியிலும் வயர் பேமண்ட் ஏற்பாடு செய்ய முடியும்.



## Western Union ®* பண மாற்றம்:

வெஸ்டெர்ன் யூனியன் பண மாற்றச் சேவைகள், பங்கு கொள்ளும் Scotiabank வங்கிக் கிளைகள் மற்றும் ஆன்லைனில் *Scotia Online* ® பொருளாதார சேவைகள் [3] மூலமும் கிடைக்கின்றன. குடும்பத்தினருக்கும் நண்பருக்கும் பணம் அனுப்பும் தேவை வரும் போது விரைவாகவும் நம்பிக்கையாகவும் அனுப்ப, வெஸ்டெர்ன் யூனியன் பண மாற்றச் சேவைகளைப் பயன்படுத்தலாம். உங்கள் பணம் 135 ஆண்டுகளுக்கு மேலான அனுபவமிக்க 200 நாடுகளில் சேவை செய்யும் வெஸ்டெர்ன் யூனியனால் கையாளப்படுகின்றதென்ற மன அமைதி உங்களுக்குக் கிடைக்கும்.

## *Interac*† மெயில் பண இடமாற்றம்:

கனடாவிற்குள் பணம் அனுப்பவோ, பெறவோ விரும்பினால் ரு எளிதான முறை *Scotia OnLine* ® பொருளாதார சேவைகள் மூலம் இன்டராக் ஈமெயில் பண இடமாற்றம் சேவையைப் பயன்படுத்துவது. ஈமெயில் மூலம் கனடியன் (1) பொருளாதார நிறுவனத்தில் கனடியன் டாலர் கணக்கு உள்ள (2) ஈமெயில் முகவரி உள்ள எவருக்கும் பணம் அனுப்பலாம்.

## உங்கள் விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்

நீங்கள் கனடாவிற்கு வரும்போது நீங்கள் பாதுகாப்பாக வைக்க விரும்பும் ஆவணங்களும் விலையுயர்ந்த பொருட்களும் உங்களிடமிருக்கலாம். Scotiabank வங்கியின் பாதுகாப்பு டெபாசிட் பாக்ஸ் மூலம் உங்கள் விலையுயர்ந்த பொருட்கள் பாதுகாப்பாக ஒரே இடத்தில் இருக்கும். உங்கள் தனிப்பட்ட தேவைகளுக்கேற்ப நாங்கள் பாதுகாப்பு டெபாசிட் பாக்ஸ்களை பல்வேறு அளவுகளில் அளிக்கிறோம். அவற்றின் இருப்புநிலை பற்றி அருகிலுள்ள Scotiabank வங்கிக் கிளையை அணுகிக் கேட்கவும்.





Scotiabank வங்கிக் குழுமத்தின் தலைமையிடம், ஸ்கோஷியா பிளாசா, டொரண்டோ



# உலகளாவிய பலம், சமூகத் தொடர்பு.

கனடாவின் மிகப்பெரிய பன்னாட்டு வங்கி

175 ஆண்டுகளுக்கு மேலாக உறுதி, நேர்மை, மற்றும் சேவை ஆகிய கொள்கைகளுக்குக் கட்டுப்பட்டது

தங்கம் மற்றும் ஏனைய விலையுயர்ந்த உலோகங்களில் உலகின் மிகப் பெரிய வணிக நிறுவனங்களில் ஒன்று.

வட அமெரிக்காவின் முதன்மையான பொருளாதார நிறுவனங்களுள் ஒன்று

Scotiabank வங்கிக் குழுமம் மற்றும் அதன் சார்பு நிறுவனங்கள் உலகெங்கும் 50 நாடுகளில் சுமார் சுஉடு 12.5 மில்லியனுக்கும் மேலான கஸ்டமர்களுக்கு சேவை செய்கின்றது.

கனடா முழுவதும் 7 மில்லியன் கஸ்டமர்களுக்குச் சேவை செய்யும் 1,000 -க்கும் அதிகமான கிளைகள் மற்றும் 2,850 ABM-கள்

உங்கள் மொழி பேசுபவர்கள் உள்பட 60,000 Scotiabank குழுமப் பணியாளர்கள்

தனிநபர்கள், சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்கள், வணிகக் குழுமங்கள், அரசாங்கங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான முழுமையான பொருளாதாரத் தீர்வுகள்



# புதுவாழ்வில் நிலைப்படுதல்




சீக்கிரமே, உங்கள் பாதுகாப்பான எதிர்காலத்திற்காக நீண்ட கால பொருளாதாரத் திடடங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய காலம் வரும். உங்கள் எதிர்கால திட்டங்களான வீடுவாங்குதல், கல்விக்காகச் சேமித்தல், திருமண நிகழ்வுகள் அல்லது ஓய்வூதியத்திற்காகச் சேமித்தல் போன்றவற்றை அடைய உதவும் சேவைகள் மற்றும் பொருளாதாரத் திட்டங்களைப் பற்றிச் சிந்திக்க விரும்புவீர்கள். உங்களது இந்தக் கனவுகளை அடைய Scotiabank வங்கி உதவ முடியும்.



## கனடாவில் சொந்த வீடு வாங்குதல்

முதன் முறையாக வீடு வாங்கும் போது எவ்வாறு வாழ்வு நிலைப்பட்டு விட்ட உணர்வு ஏற்படும் என்பது உங்களுக்குத் தெரியும். நீண்ட காலமாக கனடியர்கள் வீட்டு உரிமையாளர்களாக மாற உதவிய வரலாறு Scotiabank வங்கிக்கு உண்டு. முதல் முறை வீடு வாங்குபவர்களுக்குத் தேவையான பணம் கிடைக்க பல மார்ட்கேஜ் ஸொல்யூஷன்ஸ் எங்களிடம் உள்ளன.

புதிய கனடியர்களுக்கென சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மார்ட்கேஜ் ஸொல்யூஷன்ஸ் பற்றி அறிந்து கொள்ள Scotiabank வங்கி ஆலோசகர் ஒருவரை அணுகவும்[4].




## உங்கள் எதிர்காலத்திற்காக முதலீடு செய்யுங்கள்

உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்குமான செழிப்பான எதிர்காலத்திற்கான உங்கள் கனவுகளை அடைய இப்பொழுதே முதலீடு செய்வதே சிறந்த வழியாகும். Scotiabank வங்கி உங்களது பொருளாதார இலக்குகளை அடைய நிபுணத்துவ ஆலோசனை மூலமும் உங்களுக்கென வடிவமைக்கப்பட்ட தீர்வுகள் மூலமும் உதவ முடியும்.

உங்கள் Scotia® ஆலோசகர் குறைந்த கால மற்றும் நீண்ட கால முதலீட்டு வாய்ப்புகள் குறித்து உங்களுக்கு வழிகாட்டுவார்.

## உங்கள் குழந்தைகளின் கல்விக்காகச் சேமித்தல்

தொடக்க நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிப் படிப்பு கனடாவில் இலவசமாக இருந்தாலும் பட்டப் படிப்பு (கல்லூரிப் படிப்பு) இலவசமல்ல.

பதிவு செய்யப்பட்ட சேமிப்புத் திட்டம் (RESP)[5] என்பது நீங்கள், குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் உங்கள் குழந்தையின் கல்விக்காகச் சேமிக்க உதவும் ஒரு சிறப்பான சேமிப்புத் திட்டமாகும். Scotia ® RESP உங்கள் குழந்தையின் கல்லூரிக் கல்வியை நனவாக்க உதவும். RESP, உங்களிடம் இருந்தால் உங்கள் பயனாளி கனடா அரசின் கனடா கல்வி சேமிப்புத் திட்டத்தின் கீழ் பொருளாதார ஊக்கத்தொகைகள் பெறத் தகுதியுள்ளவரார்



## உங்கள் ஓய்வுக்காலத்திற்காகச் சேமித்தல்

உங்கள் ஓய்வுக்காலத்திற்காகப் போதுமான அளவு சேமித்தல் ஒரு முக்கியமான பொருளாதார இலக்காகும். கனடாவில், உங்கள் வருமான வரியைக் குறைத்து சௌகரியமான ஓய்வுக்காலத்திற்காகச் சேமிப்பதற்குச் சிறந்த வழிகளில் பதிவுசெய்த ஓய்வுக்காலச் சேமிப்புத் திட்டமும்(RRSP ) ஒன்றாகும். RRSP-கள் நீங்கள் கனவு கண்டவாறு ஓய்வுக்காலத்தில் வாழ உதவும். RRSP-கள் பல சாதகமான அம்சங்களைக் கொண்டுள்ளன.

- சேமிப்புகள் வரி நீக்கத்துக்கு உட்பட்டவை, ஆகவே செலுத்தப்பட்ட வரி திருப்பி அளிக்கப்படலாம்
- RRSP முதலீடுகளில் வரும் இலாபங்கள் வரியில்லாத அடிப்படையில் திட்டத்திற்குள்ளேயே ஒன்று கூட்டி வைக்கப்படும்

RRSP-ல் உங்களது முதலீடு வீடு வாங்குபவர் திட்டத்தின் கீழ் உங்கள் முதல் வீடு வாங்குவதற்குச் சேமிக்க உதவும்.[5]

*Scotia*® ஆலோசகர் ஒருவர் உங்கள் தேவைகளை மறுபரிசீலனை செய்து கவலையற்ற ஓய்வுக்காலத்திற்கு எளிமையான முதலீட்டு வழிமுறைகளைக் காட்ட முடியும்.



## சிறுதொழில் தொடங்குதல்

நீங்கள் கனடாவில் சொந்தமாகத் தொழில் தொடங்க

விரும்பலாம். Scotiabank வங்கி நடைமுறைத் தகவல்கள், ஆன்லைன் கருவிகள் மற்றும் வங்கித் திட்டங்கள் மூலம் வெற்றிகரமாகத் தொழில் தொடங்க உதவிக்கரம் நீட்ட முடியும். ஸ்கோஷியா ரன்னிங் ஸ்டார்ட் *for business™* வங்கித் திட்டம் தனிநபர் மற்றும் வணிக வங்கிச் சேவைகளில் சேமிப்புகள் மற்றும் சிறப்பு வாய்ப்புகள் உட்பட உங்களுக்குத் தேவையான உதவிகளையும் அளிக்கிறது.

நீங்கள் சொந்தத் தொழில் தொடங்க விரும்பினால், உங்களது முயற்சியை எளிதாக்கத் தேவையான உதவியை பெற்றுத் தரக் கூடிய எங்களது சிறுதொழில் ஆலோசகர் ஒருவரை அணுகுங்கள்

நாம் கனடாவிற்கு பல்வேறு காரணங்களுக்காக வந்திருக்கலாம். காரணம் ஏதாயிருப்பினும், புதுவாழ்வை உடனடியாகத் தொடங்கி செழிப்பானதாக மாற்ற விரும்பும் உங்கள் ஆசைகளை

Scotiabank வங்கி உணர்கிறது.



வளமான மற்றும் வெற்றிகரமான எதிர்காலத்தைக் கட்டமைக்க எங்களால் உதவ முடியும்.

# கலைச்சொற்கள் பட்டியல்

## தானியங்கு வங்கிக் கருவிகள் (ABMs)

உங்களை அடிப்படை வங்கிச் சேவைகளைச் செய்ய அனுமதிக்கும் கருவிகள் எ.கா. வைப்புகள், பணம் எடுத்தல், கட்டணம் செலுத்துதல்கள், வங்கிக் கணக்குகளுக்கிடையில் வங்கி அட்டையைப் பயன்படுத்திப் பணம் இடமாற்றல். ஸ்கோஷியா வங்கிக்கு கனடா முழுவதும் 2850 க்கு மேலான ABM கள் (தானியங்கிக் காசாளர் கருவிகள்) என்றும் அழைக்கப்படும்) உள்ளன.

## வங்கி அட்டை

வங்கிக் கணக்குகளைப் பயன்படுத்த பொருளாதார நிறுவனத்தால் தரப்படும்ஒரு அட்டை.

- கடன் அட்டைகள் எ - விசா போன்றவை அட்டைதாரரைப் பணமின்றிப் பொருட்கள் வாங்க வழிசெய்கின்றன. பொதுவாக, அந்தந்த மாதத் தொகையைக் கடைசி தேதிக்குள் செலுத்தி விட்டால் வட்டி கணக்கிடப்படுவதில்லை(முன்பணங்கள் தவிர்த்து). ஸ்கோஷியா வங்கியின் Scotiabank ஸ்கோஷியா Moneyback® “ விசா அட்டை தகுதியுள்ள 1% Moneyback ஆண்டு தோறும் பணத்தைத் திருப்பிக் கொடுக்கிறது.
- செலவு அட்டை - உங்கள் வங்கிக் கணக்கிலிருந்து நேரடியாக செலவு செய்ய உதவும் அட்டை. நீங்கள் இதை வங்கிக் கருவிகளில் பயன்படுத்தலாம் அல்லது கடைகளில் பொருட்கள் வாங்கி விட்டு இதன் மூலம் பணம் செலுத்தலாம்.

## வங்கி டிராகூப்ட்

இது வங்கியால் கஸ்டமரின் கணக்கிலிருந்து பணத்தைக் கழித்து விட்டு வழங்கப்படும் காசோலை ஆகும். இது ஒரு பாதுகாப்பான பணம் செலுத்தும் முறையாகக் கருதப்படுகிறது. சில நாடுகளில் இது வங்கியாளரின் டிராகூப்ட் அல்லது காசாளரின் காசோலை என்றும் அறியப்படுகிறது.

## காசோலை

பணம் கொடுப்பவரால் பணம் பெறுபவரின் பெயருக்கு வங்கியைப் பணம் மாற்றம் செய்யுமாறு அறிவுறுத்தும் கடிதம்.

## காசோலை கணக்கு

உங்களுக்குத் தேவைப்படும் போது பணம் எடுத்துக் கொள்ளக்கூடிய கணக்கு. உங்களுக்குத் தேவைப்படும் போது பணம் எடுத்துக் கொள்ளக்கூடிய கணக்கு நீங்கள் எழுதும் காசோலையில் உள்ள பணம் உங்கள் கணக்கில் உள்ளதென்று நீங்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும். சில நாடுகளில் இவ்வகைக் கணக்கு நடப்பு கணக்கு என்றும் அறியப்படுகிறது.

## காசோலை பிடித்து வைத்தல்

“காசோலை பிடித்து வைத்தல்” என்பது ஒரு காசோலையை பணம் தர வேண்டிய வங்கி காசோலையைத் திருப்பித் தராமல் இருக்க நிறுத்தி வைத்தல்.

## கடன் வரலாறு

கடன் வரலாறு என்பது நீங்கள் வைத்திருக்கும், வைத்திருந்த அல்லது விண்ணப்பித்திருக்கும் கடன் அல்லது லோன்களின் பதிவுகள். இது உங்களது கடன் வரம்புகள், பொறுப்புறுதி அளித்த கடன் அல்லது லோன்கள் மற்றும் உங்களது திருப்பிச் செலுத்தும் வரலாறு ஆகியவற்றையும் உள்ளடக்கும். இது கடன் கொடுப்பவர்களால் கடன் வாங்குபவருக்குப் புதிய கடன் கொடுக்கலாமா என்று ஆய்வு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகிறது. உங்களது கடன் வரலாறு கனடாவின் பெரிய கடன் அமைப்புகளால் கணக்கிடப்படுகிறது. (Equifax, TransUnion )

## கடன் வரம்பு

நீங்கள் அதிகபட்சமாக ஒரு கடன் அட்டையில் அல்லது கடன் தருபவரிடமிருந்து பெறக் கூடிய தொகை

## கடன் மதிப்பீடு

தனிப்பட்ட ஒரு கடன் கொடுப்பவரால் ஒருவருடைய கடன் திருப்பிச் செலுத்தக் கூடிய தகுதியை ஆராய்ந்து கொடுக்கப்பட்ட மதிப்பீடு. வங்கிகளும் பொருளாதார நிறுவனங்களும் கடன் கொடுக்கு முன் கடன் மதிப்பீட்டைக் கணக்கில் எடுத்துக் கொள்கின்றன.

## GIC-க்கள் (உத்தரவாதமளிக்கப்பட்ட முதலீட்டுப் பத்திரங்கள், குறிப்பிட்ட கால அல்லது நிரந்தர வைப்புத் தொகைகள்)

GIC-க்கள் நீங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு குறிப்பிட்ட வட்டி வீதத்திற்குப் பணத்தை வைப்பீடு வைக்கும் திட்டம். பணமாக்கக் கூடிய GIC -க்கள் முதிர்ச்சிக் காலத்திற்கு முன்னமே முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டது).

## *Interac* நெட்வொர்க்

கனடாவில் உள்ள பொருளாதார நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் ABM-களை இணைத்து உங்களுக்கு மற்ற வங்கிகளின் ABM-களையும் பயன்படுத்தி உங்கள் வங்கிக் கணக்கைப் பயன்படுத்த வழிவகுக்கும் நெட்வொர்க். இது பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்கி விட்டு நேரடியாக உங்களது வங்கிக் கணக்கிலிருந்து எலக்ட்ரானிக் முறையில் வணிகரின் கணக்கிற்குப் பணத்தை செலுத்தும் முறை.

## வட்டி

கடன் தொகையின் மீது வசூலிக்கப்படும் ஒரு கட்டணம். எடுத்துக்காட்டாக, ஒரு வங்கியிலிருந்து கடனோ அல்லது லோனோ வாங்கினால், வங்கி அந்தத் தொகையின் பயன்பாட்டிற்காக வட்டி வசூலிக்கும். இதில் லோனுக்காகச் செலவான வேறு எந்தக் கட்டணமும் அடங்காது.

## இன்டர்நெட்/ஆன்லைன் பேங்கிங்

இது வங்கியிலிருந்து அங்கீகாரம் பெற்ற இன்டர்நெட் வசதி கொண்ட கஸ்டமர்களுக்கு எலக்ட்ரானிக் முறையில் தங்கள் கணக்கைக் கையாள அனுமதிக்கும் முறை இதன் மூலம் வங்கிக் கணக்குப் பார்த்தல், கடன் அட்டை பாக்கிகள், பண மாற்றம், கட்டணம் செலுத்துதல், மற்றும் புதிய சேவைகளுக்கு விண்ணப்பித்தல் ஆகியவற்றைச் செய்யலாம். ஸ்கோஷியா வங்கி கஸ்டமர்களுக்கு இலவச இன்டர்நெட் பேங்கிங் வசதி -*Scotia OnLine* Financial Services -அளிக்கிறது.

## மணி ஆர்டர்

வங்கி டிராகூப்ட் போலவே மணி ஆர்டரும் ஒரு பொருளாதார நிறுவனத்தால் பணம் செலுத்துமாறு அங்கீகரித்த ஒரு ஆணை.

## மார்ட்கேஜ்

நிலம் அல்லது வீட்டை அடமானம் வைத்து பெறப்படும் லோன். இது பொதுவாக வீடு வாங்க வழங்கப்படுகிறது.

சில வகையான மார்ட்கேஜ்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- பாரம்பரியமான மார்ட்கேஜ் - அடமானம் வைக்கும் அல்லது வாங்கப்படும் சொத்தின் மதிப்பில் 80% க்குக் கூடாத வகையில் வழங்கப்படும் லோன்
- மாறாத வீத மார்ட்கேஜ் - வட்டி வீதம் மற்றும் திருப்பிச் செலுத்தும் காலம் குறிக்கப்பட்டது.
- மாறுகின்ற வீத மார்ட்கேஜ் - கடன் கொடுக்கும் வீதம் மாறும் போது மார்ட்கேஜ் வட்டி வீதமும் மாறுதல் (பொதுவாக ஒரு மாதத்திற்கு ஒரு தடவைக்கு மிகாமல்) .

மார்ட்கேஜ் எடுத்தவர் மார்ட்கேஜ் வைத்தவர்

கடன் கொடுத்தவர் மார்ட்கேஜ் எடுத்தவர் மற்றும் கடன் வாங்கியவர் மார்ட்கேஜ் வைத்தவர்.

## NSF (போதிய அளவு நிதியின்மை)

NSF காசோலை NSF என்று கருதப்பட்டால் கணக்கில் காசோலைத் தொகையை விடக் குறைவான பணம் உள்ளது.

## அதிகபட்ச டிராகூப் பாதுகாப்பு

உங்களை உங்கள் கணக்கில் உள்ள பணத்தைக் காட்டிலும் அதிகமாக ஒரு குறிப்பிட்ட தொகை வரைக்கும் காசோலை எழுத அனுமதிக்கும் வசதி. இதற்காக வட்டி மற்றும் குறிப்பிட்ட ஒரு மாதாந்திர தொகையை வங்கி வசூலிக்கிறது.

## பாஸ்புக்

வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க வங்கியால் வழங்கப்படும் அவரது வங்கிக் கணக்கு விவரங்கள் அனைத்தும் அடங்கிய ஒரு புத்தகம்.

# கலைச்சொற்கள் பட்டியல்

## தனிப்பட்ட அடையாள எண் (PIN)

வாடிக்கையாளரால் உருவாக்கப்பட்ட தனித்த பாதுகாப்பு எண். இது வங்கி அட்டையுடன் சேர்த்து தானியங்கு கருவி அல்லது இன்டர்நெட் அல்லது தொலைபேசி பேங்கிங் செயல்களின் போது பயன்படுத்தப்படுகிறது.

## பதிவு செய்யப்பட்ட கல்வி சேமிப்புத் திட்டம் (RESP)

RESP குழந்தையின் பட்டப்படிப்பிற்குச் சேமிப்பதற்காக வடிவமைக்கப்பட்டது. இந்தச் சேமிப்புகள் வரிநீக்கமற்றவை இல்லையென்றாலும், வரி தள்ளிப்போடும் அடிப்படையில் தகுதியான கல்வித் திட்டத்திற்கு எடுக்கும் வரை சேமிப்புகளைக் கூட்டி வளர உதவுகின்றன.

## பதிவு செய்யப்பட்ட ஓய்வுக்காலத் திட்டம் (RESP):

இந்த சேமிப்புக் கணக்குகள் உங்கள் ஓய்வுக் காலத்திற்குச் சேமிக்க உதவுகின்றன. வருமானவரி மற்றும் முதலீட்டு லாபங்கள் வரியின்றி பணம் எடுக்கப்படும் வரை சேருகின்றன. இந்தக் கணக்கிலிருந்து பணம் எடுக்கப்படும் போது வருமானவரி மற்றும் முதலீட்டு லாபங்கள் மீது வழக்கமான வருமானமாகக் கருதப்பட்டு வருமான வரி வசூலிக்கப்படுகிறது. முதலீட்டு லாபங்கள் மற்றும் பங்கு லாபங்கள் மீது வரிச்சலுகை ஏதும் இல்லை.

## சேமிப்புக் கணக்கு

இது போன்ற வங்கிக் கணக்குகள் பொதுவாக உங்கள் வைப்பீட்டுத் தொகைக்கு வட்டி அளிக்கின்றன மற்றும் எளிதாகப் பணம் எடுக்க உதவுகின்றன, மற்றும் எளிதாகப் பணம் எடுக்க உதவுகின்றன, ஆனால் காசோலைப் புத்தகம் கொடுக்கப்படுவதில்லை.

## தொலைபேசி பேங்கிங்

இந்தச் சேவை உங்களை தொலைபேசி மூலம் வங்கிச் சேவைகள் பெற உதவுகின்றன. ஸ்கோஷியா வங்கி ]‘‘>தனது வாடிக்கையாளர்களுக்கு இந்த தொலைபேசி பேங்கிங் சேவையை - *TeleScotia* தொலைபேசி பேங்கிங்- இலவசமாக அளிக்கிறது.

## வாடிக்கையாளர் சேவைப் பிரதிநிதி

உங்களது வங்கி செயல்பாடுகளில் உதவும் ஒரு முன்வரிசை வங்கிப் பணியாளர் எ.கா.பணம் பெறுதல்/செலுத்துதல், கரன்சி மாற்றுதல், டிராகூப்ட் எடுத்தல், வயர் பணமாற்றம் போன்றவை. வழக்கமாக சில நாடுகளில் அவர்கள் வங்கி டெல்லர் என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

## காலம்

ஒரு லோன் அல்லது முதலீடு செயல்பாட்டில் இருக்கும் காலம்.

## வங்கிச் செயல்பாடு

வங்கிக் கணக்கில் செய்யும் ஒரு நடவடிக்கை. அது பண வைப்பாகவோ, எடுப்பாகவோ, டெபிட் அல்லது கட்டண செலுத்துதலாகவோ, சேவைக் கட்டணம் அல்லது வட்டி செலுத்துதலாகவோ இருக்கலாம்.

## வயர் ட்ரான்ஸ்கூபெர்ஸ்

வயர் ட்ரான்ஸ்கூபெர் என்பது ஒரு வங்கிக் கணக்கிலிருந்து அதே வங்கி அல்லது வேறு நாடு அல்லது நிறுவனத்திலுள்ள ஒரு கணக்கிற்கு பண மாற்றம் செய்வது. சில நாடுகளில் இதை டெலிகிராகூபிக் ட்ரான்ஸ்கூபெர் என்றும் அழைப்பர்.

**மாதிரி கனடியன் காசோலை**



# வேறுபாடு Scotiabank வங்கியில் கீழ்க்கண்டவற்றில் பிரதிபலிக்கிறது பணியிடம்

Scotiabank போன்ற உலகின் மிக அதிகமான பல்கலாசார நாட்டின் மிகப்பெரிய பன்னாட் வங்கி. நாங்கள் தொடர்ச்சியாக, நாங்கள் சேவை செய்யும் மக்கள் அமைப்புக்கேற்ப முன்னேற்றகரமான ஆள் எடுப்பு மற்றும் பயிற்சிகள் மூலம் பணியாளர்களைக் கட்டமைத்து வருகிறோம்.



நாங்கள் வேறுபாட்டை எல்லா வடிவங்களிலும் ஏற்றுக் கொள்கிறோம் மற்றும் எங்கள் கலாசாரம் சமூகம் மற்றும் குழு உணர்வை அடிப்படையாகக் கொண்டது. நாங்கள் வெளிப்படையான தொடர்பு, வேலைவாய்ப்பு வளர்ச்சி மற்றும் நற்செயல் அங்கீகரிப்பு மற்றும் வெகுமதி அளிப்பு ஆகியவற்றைப் பின்பற்றுகிறோம்.



- நாங்கள் கேரியர் பிரிட்ஜ் என்னும் இன்டர்ன்ஷிப் திட்டத்தில் பங்கேற்று பன்னாட்டு தகுதியுள்ள குடியேறிகளுக்கு கனடா வேலை அனுபவம் கிடைக்க வாய்ப்பளிக்கிறோம்.
- Scotiabank புதிய கனடியர்கள் மற்றும் பூர்வீகக் குடிகள் மற்றும் மற்ற சிறுபான்மையிர் ஆகியோரை உட்கொணர வங்கி கல்வி மற்றும் வேலை கண்காட்சிகளில் தீவிரமாகப் பங்கேற்கிறது.
- நாங்கள் குடியேறிய மக்களின் தொழில் சாதனைகளை அங்கீகரிக்கும் பரிசுகள் கல்வி உதவித் தொகைகள் ஆகியவற்றிற்கு ஆதரவளிக்கிறோம்.



**வேலை வாய்ப்புகளுக்கு,**
**www.startright.scotiabank.com இணையதளத்திற்குச் செல்லவும்.**

நீங்கள் உங்கள் நகர்தலைத் திட்டமிட்டு விட்டீர்கள்.

உங்களது எதிர்காலத்தை உங்களோடு சேர்ந்து நாங்களும் திட்டமிட்டு உதவுவோம்.

Scotiabank *StartRight* திட்டத்தைப் பற்றி மேலும் அறிந்து

கொள்ள, www.startright.Scotiabank.com,

call 1-866-800-5159 (வட அமெரிக்கா மட்டும் என்ற எண்ணை

ஆங்கிலம், பிரெஞ்சு மற்றும் காண்டனீஸ் மொழிகளில் உதவிக்கு அழைக்கவும்

அல்லது உங்களுக்கு, அருகில், உள்ள ஸ்கோஷியா வங்கிக் கிளைக்குச் செல்லவும்.

1 உங்கள் ஸ்கோஷியா Scotiabank *StartRight*, ஙு திட்டத்திற்கு தகுதியடைய கடந்த ரு வருடங்களுக்குள் லேண்டட் இம்மிக்ரன்ட் என்ற தகுதி இருக்க வேண்டும்.

2 ஸ்கோஷியா Scotiabank கடன் விதிமுறைகளுக்கு உட்பட்டது. தனிப்பட்ட கடன் வாங்குதல் திட்டத்திற்குத் தகுதியடைய நீங்கள் கனடிய ரெசிடன்ட்டாகவும் மற்றும் மெஜாரிட்டி வயதை அடைந்தவராகவும் இருக்க வேண்டும்: PEI, QC, ON, MB, SK, AB ஆகியவற்றிற்கு கஅ வயது மற்றும் NL, NB, NS, BC, YK, NT, Nunavut ஆகியவற்றிற்கு கக வயது.

®* WESTERN UNION பெயர் , சின்னம் மற்ற வணிகச் சின்னங்கள், சேவைச் சின்னங்கள் அமெரிக்கா மற்றும் பல நாடுகளிலும் Western Union Holdings , Inc, கம்பெனியால் பதிவு செய்யப்பட்டது, இங்கு அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது.

3 Scotiabank யூனியன் பண மாற்ற சேவைகளைச் செய்ய ஸ்கோஷியா வங்கி அங்கீகாரம் பெற்ற நிறுவனமாகும். வெஸ்டர்ன் யூனியன் பண மாற்றக் கட்டணம் அனுப்படும் தொகை மற்றும் இடத்தைப் பொறுத்து மாறுபடும். வெஸ்டர்ன் யூனியன் பண மாற்றக் கட்டணம் பற்றிய விவரங்கள் பங்கு பெறும் ஸ்கோஷியா வங்கிக் கிளையில் பெற்றுக் கொள்ளப்படலாம் பண இருப்புகள் சேவை நிபந்தனைகள்,முகவர் இருப்பிடம் சேவை நேரங்கள் ஆகியவற்றைப் பொறுத்ததாகும். வெஸ்டர்ன் யூனியன் பண மாற்றச் சேவையைப் பயன்படுத்த ஒரு வழக்கமான ஸ்கோஷியா வங்கிக் கணக்கு அவசியமானதாகும்.

† Interac சின்னம் Interac Inc.நிறுவனத்தைச் சேர்ந்தது. ஸ்கோஷியா வங்கி அங்கீகாரம் பெற்ற பயனாளர்.

4 குடியிருப்புச் சொத்துக்களுக்கு Scotiabank மற்றும்/அல்லது CMHC/கென்வொர்த் கூபைனான்சியல் கனடா ஆகியோரின் கடன் மற்றும் கடனளித்தல் சொத்தானது மற்றும் விதிமுறைகளைப் பொறுத்தது.

5 கனடியன் ரெசிடன்டாகவும், செல்லக்கூடிய சமூக காப்புறுதி எண்(SIN) உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

® ஸ்கோஷியா வங்கியின் பதிவு நோவா ஸ்கோஷியா வங்கி.

TM ஸ்கோஷியா வங்கியின் பதிவு நோவா ஸ்கோஷியா வங்கி.

Scotiabank குழுமம் என்பது The Bank of Nova Scotia, Scotia Capital Inc, நோவா ஸ்கோஷியா வங்கி நோவா ஸ்கோஷியா டிரஸ்ட் கம்பெனி, ஸ்கோஷியா செக்யூரிட்டீஸ் இன்க்., ஆகியவற்றைக் குறிக்கும்.

9097213 (04/08)